அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி தலைவர் செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி K. கிருஷ்ணவேணி

ந.க.எண் 1/2024-2025 நாள் : 12.04.2024

பொருள்	:	குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம்– திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் – அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி – A. இராமலிங்காபுரம் கிராமம் சர்வே எண்கள் 1137/3C3A1,1137/3C3A2 ஏக்கர் 83ல் பரப்புளவு 3375 ச.மீட்டர் இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்
பார்வை	:	துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு விருதுநகர் அவர்களின் கடிதம் ROC No. OJ1S7JGT/2024/TCP விருமா நாள் : 05.04.2024

உத்தரவு :

திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் – அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி / A.இராமலிங்காபுரம் கிராமம் சர்வே எண்கள். 1137/3C3A1,1137/3C3A2 ஏக்கர் 83ல் பரப்புளவு 3375 ச.மீட்டர் இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் பார்வையில் கண்ட கடிதத்தின்படி நிபந்தனைகளுடன் வரப்பெற்றுள்ளது. ஏற்கனவே கீழராஜகுலராமன் சார்பதிவக எண். 1148/2024 நாள் : 28.03.2024 பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் பத்திர பதவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்படும் இனங்களுக்கு கூராய்வு கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.830/ ம் நில பயன்மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3 விழுக்காடும் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் இடத்திற்கான சார்பதிவாளர் கீழராஜகுலராமன் அவர்களின் அடிப்படையில் சந்தை மதிப்பில் ஏக்கர் 300000ஆக உள்ள நிலையில் 3 விழக்காடு நில பயன் மாற்றக் கட்டணமாக ரூ.7500/ ம் கூராய்வு கட்டணமாக ரூ. 1000/ம் பிளாட் 1க்கு வீதம் ரூ.1000/ வீதம் 27 பிளாட்க்கு ரூ.27000/ பல்வகை ரசீது எண். 2024-2025/24/7/2/7/1 நாள் 12.04.2024ன்படி மொத்தம் ரூ. 35300/ மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே பார்வையில் கண்ட கடிதத்தில் நிபந்தனைகளின்படி அச்சந்தவிழ்த்தான ஊராட்சி – A.இராமலிங்காபுரம் கிராமம் சர்வே எண்கள்

1137/3C3A1,1137/3C3A2 கீழ்க்கண்டவாறு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

சர்வே எண்கள்	மனைப்பிரிவு எண்கள்	வீட்டு மனைகளின் எண்ணிக்கை	மொத்தப் பரப்பளவு
1137/3C3A1,1137/3C3A2	1–27	27	3375 ச.மீட்டர்

நிபந்தனைகள்:

- பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்த இடங்களை மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொடுக்க வேண்டும்.
- மனுதாரர் உபயோகம் ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது.
- தனி மனைகள் குறித்து நில உரிமம் மற்றும் அளவுகள் விபரம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரியவந்தால் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் தவறும் பட்சத்தில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

K. Krishnaveni
தலைவர்
அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி

தலைவர்
அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி
திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு:
மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்:
திரு. C. சுரேஷ்